## வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்கவின் அவுஸ்திரேலியாவுக்கான விஜயம்

வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் அழைப்பின் பேரில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க அவர்கள், மார்ச் 26 ஆந் திகதி அவுஸ்திரேலியாவின் வெளியுறவு அமைச்சர் ஜுலி பிஷொப் அவர்களை சந்தித்தார். இரு அமைச்சர்களும் வலுவான மக்கள்-மக்கள் தொடர்பு மற்றும் வளர்ச்சியடையும் பொருளாதார உறவுகள், நாடு கடந்த குற்றங்களை தடுப்பதற்கான ஒத்துழைப்பு ஆகியவை குறித்து கலந்துரையாடினர். வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜுலி பிஷொப் அவர்கள், ஆட்கடத்தலைத் தடுப்பதற்கான இலங்கையின் ஒத்துழைப்புக்கு அவுஸ்திரேலியாவின் பாராட்டுக்களை தெரிவித்தார். 2017 ஜுலை மாதம் ஜுலி பிஷொப்பின் இலங்கைக்கான விஜயத்தின் போது டெங்கு ஒழிப்புக்கான ஆதரவு மற்றும் இலங்கைக்கு நீண்டகால அபிவிருத்தி உதவிகளை வழங்குவதாக அறிவித்திருந்த அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு இராஜாங்க அமைச்சர் சேனாநாயக்க நன்றிகளைத் தெரிவித்தார். இரு அமைச்சர்களும், பரஸ்பர கரிசணைகளான பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் கடல்சார் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடியதுடன், இலங்கையில் சுரங்கம் மற்றும் சக்திவள துறைகளில் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை அவுஸ்திரேலிய நிறுவனங்கள் வெளிப்படுத்தியிருந்தன. இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு மீதான அவுஸ்திரேலியாவின் ஆர்வம் கருதி, அண்மைய அபிவிருத்திகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விளக்கியதுடன், இந்த விடயங்கள் மீதான நடைமுறைக்கேற்ற அணுகுமுறையைக் கையாண்ட அவுஸ்திரேலியாவிற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

அமைச்சர் சேனாநாயக்க அவர்கள், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கொன்செட்டா ஃபெரொவென்டி வெல்ஸ் அவர்களை சந்தித்ததுடன், பாராளுமன்றத்தின் அவுஸ்திரேலியா - இலங்கை பாராளுமன்ற குழுவின் தலைவர் ஸ்கொட் புச்ஹொல்ஸ் தலைமையில் மதிய போசணை விருந்தொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மதியபோசணை விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்த ஏனைய விருந்தினர்களுள், வேறொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்திருந்த இலங்கை பெண்கள் பாராளுமன்றக் குழுவினர் மற்றும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர். கன்பெரா நகரில் இடம்பெற்ற ஏனைய சந்திப்புகளில், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தில் நடைபெற்ற மதியபோசணை விருந்து ஈடுபாட்டில் அவுஸ்திரேலிய தேர்தல் ஆணையாளர் மற்றும் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கற்கைநெறியைப் பயிலும் அவுஸ்திரேலிய விருதுகளைப் பெற்ற புலமைப்பரிசில்தாரர்களை சந்திக்கும் வாய்ப்பும் சேனாநாயக்க அவர்களுக்கு கிடைத்தது. மேலும் கன்பெராவில் அமைந்துள்ள இலங்கை பௌத்த விகாரைக்கும் அமைச்சர் விஜயம் செய்திருந்தார்.

பேர்த் நகரில் இந்து சமுத்திர கடல்சார் ஆய்வு நிலையத்தின் ஆசிய ஈடுபாட்டிற்காக மேற்கு அவுஸ்திரேலிய அமைச்சரை சந்தித்த அமைச்சர் சேனாநாயக்க அங்கு தனது பயணத்தை முடித்துக் கொண்டதுடன், பெர்த் USAsia நிலையத்தில் இலங்கையின் வெளிநாட்டு கண்ணோட்டம் மற்றும் பிராந்திய நிறுவனங்களுடனான உறவுகள் தொடர்பில் உரையாற்றினார்.

இந்த சந்திப்புகளின் போது அமைச்சருடன், அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் உயர் ஆணையாளர் சோமசுந்தரம் ஸ்கந்தகுமார் அவர்களும் இணைந்து கொண்டிருந்தார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2018 ஏப்ரல் 2